**சிவகாசி நகர்மன்றம்**
**அவசரக் கூட்டம்**

**நகராட்சி அலுவலகம்.**
**அவசரக்கூட்டம் எண் .** **நாள் : 20 .05.2020.**

நிகழும் திருவள்ளுவராண்டு 2049 விகாரி வருடம் வைகாசி திங்கள் 7ஆம் நாள் 2020ம் ஆண்டு மே மாதம் 20 ம் தேதி புதன்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு நடைபெற்ற நகர்மன்ற அவசரக்கூட்ட நடவடிக்கைகள்.

**முன்னிலை : திரு. ப.கிருஷ்ணமூர்த்தி எம்.ஏ.,எம்பில்.,**
**தனி அலுவலர்.**

**பொருள் :**

1. நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்2837/2016/பி2 நாள் 09.02.2016 ன் படி சிவகாசி நகராட்சிக்கு புதிதாக அலுவலக கட்டிடம் கட்டும் பணிக்கு Infra Gap Filling Fund and Operation & Maintenance Gap Filling Fund 2015-16 & 2016-17 ம் ஆண்டு சிவகாசி இரத்தினம் நகரில் சிவகாசி நகராட்சிக்கு புதிதாக அலுவலக கட்டிடம் கட்டும் பணிக்கு தொகை ரூ.500 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. அதன்படி தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டடு மின்னனு ஒப்பந்தப்புள்ளியின் வாயிலாக ஒப்பந்த புள்ளி பெறப்பட்டு தற்போது பணி நடைபெற்று முடிவுறும் நிலையில் உள்ளது. மேலும் , நகராட்சி புதிய அலுவலகக்கட்டிடம் கட்டும் பணியில் மதிப்பீட்டினை விட கூடுதலாக 4.98 சதவீதம் ஒப்பந்தபுள்ளி வரப்பெற்றது.இப்பணிக்கு GST 12% கூடுதல் தொகை செலுத்த வேண்டியுள்ளதாலும், இப்பணியினை முழுமையாக முடிக்க அலுவலகத்தை சுற்றிலும் சுற்றுசுவர் கட்டும் பணி , சாலை வசதிகள் செய்யவும் , சோலார் எனர்ஜி மின்வசதிகள் செய்யவும் , கூடுதல் மின்வசதிகள் செய்ய புதிதாக மின்இயக்கி வாங்கவும் அதற்க்கு மின் இயக்கி அறை கட்டவும், அலுவலகத்தை சுற்றிலும் மழைநீர் சேகரிப்பு வடிகால் அமைக்கவும், இருசக்கர வாகனம் மற்றும் நான்கு சக்கர வாகனம் நிறுத்தம் அமைக்கவும் , அலுவலக பயன்பாட்டிற்க்காக மின் தூக்கி பொறுத்தவும் தயார் செய்யப்பட்டுள்ள திருத்திய மதிப்பீட்டுத்தொகை ரூ.640இலட்த்திற்கு திருத்திய நிர்வாக அனுமதி மற்றும் திருத்திய தொழில்நுட்ப அனுமதி வேண்டி நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி வழியாக நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களுக்கு கூடுதல் செலவுத்தொகையை Infra Gap Filling Fund and Operation & Maintenance Gap Filling Fund- ன் கீழ் முழு மானியமாக வழங்கக்கோரி பிரேரணை தயார்செய்து அனுப்புவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

   அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.
   ந.க.எண் : 10816/2015/இ1.

   அனுமதிக்கப்பட்டது தீர்மான எண் 947

2. நகராட்சி நிர்வாக ஆணையர்,சென்னை அவர்களின் ந.க..3336/12/2020-12 நாள்:24.03.2020ல் முதல் தவணை ரூ.5.00 இலட்சம் மற்றும் ந.க..3336/12/2020-12

நாள்:23.04.2020ல் முன்றாம் தவணையாக ரூ.15.00 இலட்சம் ஆகிய தொகைகள் நகராட்சி பகுதிகளில் கொரோனா நொய் தடுப்பு நடவடிக்கைக்கு இந்நகராட்சிக்கு ஒதுக்கீடு செய்து வரப்பெற்றுள்ளது. மேற்படி உத்திரவில் கொரோனா தடுப்பு நடவடிக்கைக்கு தேவையான கிருமி நாசினிகள், மாஸ்க், கையுறை, பாதுகாப்பு உபகரணங்கள் வாங்கிக் கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேற்படி தடுப்பு நடவடிக்கைக்கு வரப்பெற்றுள்ள நிதி ஒதுக்கீட்டினை மன்றத்தின் பார்வைக்கு வைப்பதற்கும், மேலும் மேற்படி கிருமி நாசினிகள் மற்றும் பாதுகாப்பு உபகரணங்களை ஒப்பந்த நடவடிக்கை ஏதும் இன்றி பேரிடர் மேலாண்மை நடவடிக்கையினை கருத்தில் கொண்டு நேரிடையாக விநியோகம் செய்து கொள்ள் FINANCE (SALARIES) DEPARTMENT SECRETARIAT, CHENNAI-9 LETTER NO.74/TS(MA) FINANCE/SALARIES/2020DATED:01.04.2020உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளதையும் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. பொது சுகாதார அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று நிறுவனங்களுக்கு நேரிடையாக விநியோக உத்திரவு வழங்கியமைக்கும், தொகை வழங்கப்பட்டமைக்கும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

ந.க.எண்: 1856/2020/எச்1.

அனுமதிக்கப்பட்டது தீர்மான எண் 948

3. அரசாணை (நிலை) எண்.238 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.01.10.1997-ல் 20 ஆண்டுகள் மாசற்ற முறையில் பணிபுரியும் ஊர்தி ஓட்டுநர்களுக்கு தங்கப்பதக்கம் வழங்குவதற்கு ஆணையிடப்பட்டுள்ளது.

அதன்படி சென்னை நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களின் 09.01.2020-ந் தேதிய ந.க.4980/2018/ஜே3 எண் செயல்முறை கடிதத்தில் சிவகாசி நகராட்சியில் பொது சுகாதார பிரிவு மற்றும் குடிநீர் பிரிவில் 20 ஆண்டுகள் மாசற்ற முறையில் விபத்துகள் ஏதுமின்றி பணிபுரிந்து வரும் கீழ்கானும் ஓட்டுநர்களுக்கு தங்கப்பதக்கம் மற்றும் நற்சான்று வழங்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | ஊர்தி ஓட்டுநரின் பெயர் | ஓட்டுநராக பணியில் சேர்ந்த நாள் | 20 ஆண்டுகள் பணி முடித்த நாள் | பிரிவு |
|---|---|---|---|---|
| 1 | செ.மூர்த்தி | 10.09.1998 | 09.09.2018 | பொறியியல் பிரிவு |
| 2 | இரா.சிவராமன் | 27.05.1998 | 26.05.2018 | பொது சுகாதார பிரிவு |
| 3 | மு.கொத்தாளமுத்து | 04.10.1999 | 03.10.2019 | பொது சுகாதார பிரிவு |

மேற்படி ஊர்தி ஓட்டுநர்க்கு தங்கப்பதக்கம் வழங்குவதற்கு ஆகும் செலவுத் தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து செலவிட வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி ஊர்தி ஓட்டுநருக்கு தங்கப்பதக்கம்

வழங்குவதற்கும், அதற்கு ஆகும் செலவுத் தொகைக்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு -
1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. அவசர அவசியம் கருதி நகர்மன்ற தனி அதிகாரியின் முன் அனுமதி பெற்று தொகை செலுத்தி மேல்நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றம் அங்கீகரிக்கலாம்.

( ந.க.எண்.6257/2019/எச்1)

அனுமதிக்கப்பட்டது தீர்மான எண் 949

4. சிவகாசி நகராட்சியில், வருவாய்நிதியில் PKS ஆறுமுகம் ரோடு சிறுபாலம் அமைக்கும் பணிக்குரிய 16.10.2017ம் தேதிய பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்டு பட்டியல் தொகையில் 5 % காப்பு வைப்புத் தொகை ரூ.4925/- திரு.V.குருசாமி ஒப்பந்ததாரர் பெயரில் காலங்கடந்த வைப்புத் தொகை பதிவேடு-2016-2017-வால்யூம்-V பக்கம் எண்.2 வரிசை எண்.7ல் கீழ்க்கண்டவாறு பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி வைப்புத் தொகை ரூ.4925/- ஒப்பந்ததாரருக்கு வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | காலங்கடந்த வைப்புத் தொகை பதிவேடு 4016 RF | பணியின் பெயர் | காலங் கடந்த வைப்புத் தொகை பதிவேடு ஆண்டு | காலங் கடந்த வைப்புத் தொகை பதிவேடு பக்கம் எண் | காலங் கடந்த வைப்புத் தொகை பதிவேடு பதிவேட்டின் வரிசை எண் | தொகை ரூ. |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2016-2017 வால்யூம் - V 4016 RF | PKS ஆறுமுகம் ரோடு சிறுபாலம் அமைக்கும் பணி | 2016-2017 | 2 | 7 | 4925 |
| | | | | | மொத்தம் | **4925** |

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம் .

ந.க.எண். 7070/2019/பி4 .

அனுமதிக்கப்பட்டது தீர்மான எண் 950

5. சிவகாசி நகராட்சியில் பொது சுகாதார பிரிவில் துப்புரவு பணி மேற்பார்வையாளராக பணிபுரிந்து வரும் திரு.பி.இராமச்சந்திரன் என்பவர் வயது முதிர்வின் காரணமாக 31.05.2020ம் தேதியில் ஓய்வு பெற உள்ளதால் அன்னாருக்கு சிறப்பு சேமநலநிதித் தொகையில் அரசு பங்குத் தொகை ரூ.10000/- (பத்தாயிரம் மட்டும்) அரசு ஆணை எண்:42 நிதி(ஓய்வூதியம் ) நாள்:15.09.2000ன் படி வழங்கவும் செலவு தொகையினை பொது நிதியில் செலவு செய்யவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
அலுவலககுறிப்பு:அனுமதிக்கலாம்.
ந.க.எண்:2359/2020/பி2

அனுமதிக்கப்பட்டது தீர்மான எண் 951

6. சிவகாசி நகராட்சியில் உள்ள ஈப்பு வாகனம் TN 67 AK 4513 ஆறு வருடத்திற்கு மேல் இயங்கி வருகிறது. மேற்படி ஈப்பு வாகனத்திற்கு FC பெறுவது கிடையாது. Company Service மட்டும் செய்யப்பட்டு பயன்பாட்டில் இருந்து வருகின்றது. எனவே ஈப்பு வாகனத்தில் பழுது நீக்கப்பணிகளும், பழுதான உதிரி பாகங்கள் மாற்றும் பணி செய்ய வேண்டியிருப்பதால் Automotive Manufacturers Pvt. Limited, Madurai மூலம் மேற்கண்ட பணியை செய்ய ரூ.90,671/- க்கு (ரூபாய் தொண்ணூராயிரத்து ஆறு நூற்றி ஏழுபத்தி ஒன்று மட்டும்) செலவு பட்டியல் பெறப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட பணியை Automotive Manufacturers Pvt. Limited, Madurai என்ற நிறுவனம் மூலம் குடிநீர் நிதியில் செய்ய மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்: 188/2020/இ2.

அனுமதிக்கப்பட்டது தீர்மான எண் 952

7. நகராட்சிக்கு எதிரான வழக்கில் நகராட்சி சார்பாக ஆஜரான வழக்கறிஞர் திரு.செந்தில் குமரையா அவர்களிடம் இருந்து கீழ்க்கண்ட வழக்குகளுக்கு வழக்கறிஞர் கட்டணம் வழங்க கோரி பட்டியல் வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | வழக்கின் சுருக்கம் | வழக்கு எண் | வழக்கின் தன்மை | வழக்கறிஞர் கட்டணம் ரூ. |
|---|---|---|---|---|
| 1 | குடிநீர் குழாய் இணைப்பு வழங்க கோரி அனுசியா தேவி என்பவரால் சிவகாசி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு | OS.No.75/2015 | தள்ளுபடி | 5000 |
| 2 | சொத்துவரி தீர்வை மாற்றம் செய்யக்கோரி கிரேஸ்பாக்கியம் என்பவரால் சிவகாசி சார்பு நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு | OS.No.153/2018 | நிலுவை | 5000 |
| 3 | நகராட்சி குடிநீர் பிரிவு வாகனத்தில் விபத்துக்குள்ளான சுசில்ராணி நஷ்ட ஈடு வழங்க கோரி சிவகாசி சார்பு நீதிமன்றத்தில் | EP.No.10/2012 | தள்ளுபடி | 5000 |

| | | | | |
|---|---|---|---|---|
| | தொடரப்பட்ட வழக்கு | | | |
| 4 | சொத்தின் உரிமை மாற்றத்தை ரத்து செய்யக்கோரி அரசு என்பவர் சிவகாசி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு | IA.No.76/2019 | நிலுவை | 5000 |
| 5 | சிவகாசி நகராட்சி பேருந்து நிலையத்தில் உள்ள இருசக்கர வாகன காப்பகத்தில் மிதிவண்டி காணாமல் போனதாக சின்ன சக்கரை என்பவர் திருவில்லிபுத்தூர் நுகர்வோர் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு | CC.No. 27/2019 | நிலுவை | 5000 |
| 6 | குடிநீர் குழாயில் மின்மோட்டார் மூலம் குடிநீர் உறிஞ்சியதர்க்காக மின்மோட்டார் நகராட்சி மூலம் பறிமுதல் செய்யப்பட்டது. மின்மோட்டாரை திரும்ப வழங்க கோரி ஜான்சிராணி என்பவரால் சிவகாசி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு | OS.No. 37/2017 | தள்ளுபடி | 5000 |
| 7 | குடிநீர் குழாய் இணைப்பு வழங்க கோரி ஜான்சிராணி என்பவரால் சிவகாசி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு | OS.No.155/2017 | அனுமதி வழங்கப் பட்டது | 5000 |

மேற்கண்ட பட்டியல் தொகை ரூ.35000/- நகராட்சி சார்பாக ஆஜரான வழக்கறிஞர் திரு.செந்தில் குமரையா அவர்களுக்கு நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்:0009/2020/இ2

அனுமதிக்கப்பட்டது தீர்மான எண் 953

8. சிவகாசி நகராட்சியின் அலுவலகப் பயன்பாட்டிற்கு தேவையான ரப்பர் ஸ்டாம்புகள் மற்றும் நாள்முத்திரை தயார் செய்து வாங்கப்பட்டமைக்கான மொத்த செலவினம் ரூ.1610/- திரு.மு.முத்துசெல்வம் , மேலாளரால் வழங்கப்பட்டது. மேற்படி செலவினத் தொகையினை அன்னார்க்கு வழங்குவதற்கு மன்றத்தின் பார்வைக்கும் , அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்: /2020/சி1

அனுமதிக்கப்பட்டது தீர்மான எண் 954

**தனி அலுவலர்.**
**சிவகாசி நகராட்சி**